# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.7/2020

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-9 |
| Name | : டாக்டர் சங்கீதா |
| Father's / Husband Name | : மோகன்குமார் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 11th day of November 2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் நாமக்கல் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசிரியர் மற்றும் துறை தலைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.02.2019 அன்று சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லு மருத்துவமனையில உதவி பேராசியராக பணியில் இருந்தபோது அம்மாபேட்டை காவல்நிலைய குற்ற எண்.36/2019 என்ற வழக்கில் இறந்துபோன சுமார் 16 வயது மதிக்கத்தக்க ஆறுமுகம் என்பவரின் ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவல்

ஆய்வாளர் அம்மாபேட்டை காவல்நிலையம் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை பெற்று சகாயராஜ் என்பவர் அடையாளம் காட்ட பிற்பகல் 12.35 மணியளவில் பிரேத பரிசோதனை மேற்கொண்டேன்.

பிரேத பரிசோதனையின் போது மரண விரைப்புத்தன்னை பிரேதத்தின் உடல் முழுவதும் காணப்பட்டது. பிரேதமானது சாதாரண உடல்வாகு கொண்டதாக இருந்தது.

பிரேதத்தின் மீது காணப்பட்ட வெளிப்புற காயங்கள் 1) சிவப்பு நிற சிராயப்பு காயம் நடுநெற்றியில் 5.5x1.5 செமீ அளவில் காணப்பட்டது. 2)சிவப்பு நிற சிராய்ப்பு காயம் மூக்கின் நடுப்பகுதியில் 2x1 செமீ அளவில் காணப்பட்டது. அதன் அடிப்பகுதி எலும்பு முறிந்து காணப்பட்டது. அதன் சுற்றியுள்ள தசை பகுதி கன்றி காணப்பட்டது. 3) வலது பக்க மூக்கு பகுதி 1x1.5 செமீ அளவில் சிகப்பு நிற சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 4) சிவப்பு நிற சிராயப்பு காயம் இடது கன்னத்தில் 0.5x0.5 செமீ அளவில் இருந்தது. 5) இடது பக்க மேல் உதட்டில் 1x0.5 செமீ அளவில் காணப்பட்டது. 6)வலது கன்னத்தில் 6x3.5 செமீ அளவில் காணப்பட்டது. 7) கழுத்தின் நடுவில் 3.5x0.5 செமீ அளவில் காணப்பட்டது. 8) வலது தோள்பட்டையில் 0.5x0.5 செமீ அளவில் இருந்தது. 9) வலது முழங்கையின் பின்பகுதியில் 0.5x0.5 செமீ அளவில் இருந்தது. 10) வீக்கம் மற்றும் உருமாற்றம் இடது கீழ் தாடையில் காணப்பட்டது. அதை கூரிட்டு பார்த்தபோது அதன் அடிபகுதி எலும்பு முறிந்தும் அதை சுற்றியுள்ள தசை பகுதி கன்றியும் காணப்பட்டது. 11) வெட்டுகாயமானது இடது காதின் மேற்பகுதியில் வெளிப்புறமாக 3.5x1x0.5 செமீ அளவில் காணப்பட்டது. 12) பலதரப்பட்ட மேலோட்டமான வெட்டுகாயமானது

கழுத்தின் நடுபகுதியில் சுமார் 6 ஒன்றின் கீழ் ஒன்றாக இருந்தது. ஒவ்வொன்றும் சுமார் 3.5x0.5x0.5 செமீ அளவில் காணப்பட்டது. 13)வெட்டுக்காயமானது இடது முன்னங்கையில் 3x0.5x0.5 செமீ அளவில் காணப்பட்டது.

தலைப்பகுதியை கூரிட்டு பார்த்தபோது தலைதோலின் உட்புறமாக அடர்சிவப்பு கன்றிய காயம் இடது முன் மற்றும் பக்கவாட்டு பகுதியில் 20x10x0.5 செமீ அளவில் காணப்பட்டது. மண்டை ஓடு இடதுபுறமாக பக்கவாட்டு மட்டும் பின்பகுதி எலும்பு முறிந்து காணப்பட்டது. மூளை கடுமையாக வீங்கி காணப்பட்டது. மூளையின் இடதுபக்கம் முழுவதும் இரத்தம் கசிந்து காணப்பட்டது. மண்டை ஓட்டின் நடுபகுதி எலும்பு முன் மற்றும் நடுபகுதியில் முறிந்து காணப்பட்டது. கழுத்து பகுதியை கூரிட்டு பார்த்தபோது வலது பக்க கழுத்து பகுதியில் 2x1x0.5 செமீ அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. விலா எலும்புகள் மற்றும் நுரையீரல்கள் சாதாரணமாக இருந்தது. இரைப்பையில் 50 மிலி அளவு பழுப்பு நிற திரவம் எந்தவித நெடியும் இன்றி இருந்தது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் சாதாரணமாக இருந்தது. இடுப்பு எலும்பு மற்றும் தண்டுவடம் சாதாரணமாக இருந்தது. பிரேதத்திலிருந்து உடல் உள்ளுருப்புகளை சேகரித்து இரசாயண பரிசோதனைக்கு சேலம் வட்டார தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேலும் இறப்பானது பிரேத பரிசோதனையிலிருந்து 24 மணி நேரத்திற்கு முன்பு இறந்திருக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அதசாஆ.9** ஆகும். சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் நச்சு பொருட்கள் எதுவும்

கண்டறியப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இரசாயண பரிசோதனை அறிக்கை **அதசாஆ.10** ஆகும். அதனடிப்படையில் நான் வழங்கிய இறுதி கருத்து மேற்கண்ட நபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளினால் இறந்திருக்க கூடும் என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். எனது இறுதி கருத்து **அதசாஆ.11** ஆகும். மேலே குறிப்பிட்ட காயங்கள் சாபொ.1 வரிசை மற்றும் சாபொ.6 ஆகியவைகளால் ஏற்பட வாய்ப்பு உண்டு. அது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

போலிசார் விசாரித்தபோது சாபொ.1 மற்றும் சாபொ.6 அகியவற்றை காட்டி கருத்துரை பெற்றார்களா என்றால் ஞாபகமில்லை. பொதுவாக புத்திசுவாதீனமற்ற ஒரு நபர் பிளேடு அல்லது தகரம் போன்ற பொருட்களால் தன்னை தானே கழுத்தில் கிழித்து கொண்டால் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட 7-வது காயம் போல ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. சிதிலமடைந்த கட்டிடத்தில் ஒரு நபர் விளையாடி கொண்டிருக்கும் போது தடுமாறி கீழே விழும்போது 1 முதல் 6 வரையிலான காயங்கள் போல ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் அது விழும் வேகம் மற்றும் தூரத்தை பொறுத்து மாறுபடும்.

என்னை போலிசார் விசாரித்த தேதி மற்றும் நேரம் நினைவில்லை. பொதுவாக உயராமான பகுதியிலிருந்து கீழே விழும்போது செங்கல் அல்லது கருங்கல்லில் மோதும் போது இறந்துபோன நபருக்கு தலையில் ஏற்பட்ட காயம் போல ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை.

ஒம்/- S. எழில் வேலவன், இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.